# தொடர்பாடல் சரிபார்ப்பு

## பிறப்பு முதல் நான்கு வயது வரையான பிள்ளைகளுக்கு பின்வரும் கேள்விகளில்

**எதற்கேனும் இல்லை என்பது பதிலாயின், 1-833-575-5437 இல் Early Abilities ஐ அழையுங்கள்**

உமது பிள்ளையின் முதன் மொழி ஆங்கிலமல்லாவிடின், சரிபார்ப்புப் பட்டியலை உமது பிள்ளையின் சொந்த மொழியில் பயன்படுத்துக. சரிபார்ப்புப் பட்டியல்கள் பல மொழிகளில் கிடைக்கப் பெறுகின்றன.

---

### 2 மாதங்களாகையில் ........................................ ஆம் இல்லை

**உங்களது குழந்தையின் செவிப்புலன் சோதிக்கப்பட்டதா?** ........................................ ☐ ☐

இல்லையெனின், உங்களது வீட்டுக்கு அருகிலுள்ள ஒரு சிகிச்சையகத்தில் இலவச குழந்தைச் செவிப்புலன் சோதனையொன்றை அமைப்பதற்காக 1-833-575-5437 இல் எம்மை அழைக்க.

### 6 மாதங்களாகையில்

**பிள்ளை:**

- பெரும் சப்தங்களுக்கப் பதிலளிக்கும் விதத்தில் திக்குகிறதா? ........................................ ☐ ☐
- ஓசை வருமிடத்தை நோக்கித் திரும்புகிறதா? ........................................ ☐ ☐
- வெவ்வேறு தேவைகளுக்காகவும் (பசி, களைப்பு) வெவ்வேறு விதமாக ஒலியெழுப்புகிறதா? ........................................ ☐ ☐
- நீங்கள் அவளுடன்/அவனுடன் பேசும் போது உங்களது முகத்தைப் பார்க்கிறதா? ........................................ ☐ ☐
- உங்களது புன்சிரிப்புக்களுக்கும் வெடிச்சிரிப்புக்களுக்கும் பதிலளிக்கும் வகையில் சிரிக்கிறதா? ........................................ ☐ ☐
- இருமுதலை அல்லது ஆ, ஏ, பு போன்ற வேறு ஓசைகளைப் போன்று செய்து காட்டுகிறதா? ........................................ ☐ ☐

### 9 மாதங்களாகையில்

**பிள்ளை:**

- அவனது/அவளது பெயருக்குப் பதிலளிக்கிறதா? ........................................ ☐ ☐
- தொலைபேசி மணியோசைக்கு அல்லது கதவைத் தட்டுவதற்குப் பதிலளிக்கிறதா? ........................................ ☐ ☐
- இல்லை என்று சொல்வதை விளங்கிக் கொள்கிறதா? ........................................ ☐ ☐
- உடலசைவுகளைப் பயன்படுத்தி தனக்குத் தேவையானதை அவள்/அவன் பெறுவதுண்டா (தூக்கிக் கொள்ள வருதல்)? .. ☐ ☐
- உங்களுடன் சமூக விளையாட்டுக்களை விளையாடுகிறதா (ஒளித்து விளையாடுதல்)? ........................................ ☐ ☐
- மனிதர்கள் சூழவிருப்பதில் மகிழ்ச்சியடைகிறதா? ........................................ ☐ ☐
- பாபாபாபா அல்லது டுஹ்டுஹ்டுஹ் போன்ற ஓசைகளைப் பிதற்றுவதுடன் மீண்டும் மீண்டும் கூறுகிறதா? ........................................ ☐ ☐

## 12 மாதங்களாகையில்

ஆம் இல்லை

**பிள்ளை:**

- எளிய ஒரு படிப் பணிப்புக்களைப் பின்பற்றுகிறதா (உட்கார்.)? ☐ ☐
- பெரியவர்கள் ஒரு விளையாட்டுப் பொருளைச் சுட்டும் போது அறையில் அதைத் தேடுகிறதா? ☐ ☐
- மூன்று முதல் ஐந்து சொற்கள் வரை தொடர்ச்சியாகப் பயன்படுத்துகிறதா? ☐ ☐
- தொடர்பாடலுக்கு உடலசைவுகளைப் பயன்படுத்துகிறதா (ஹாய்/பை கூறியசைத்தல், இல்லையெனத் தலையசைத்தல்)? ☐ ☐
- ஓசைகள், உடலசைவுகள், உங்களது கண்களைப் பார்த்துக் கொண்டே சுட்டிக் காட்டுதல் என்பவற்றைப் பயன்படுத்தி உங்களது கவனத்தைப் பெறுகிறதா? ☐ ☐
- உங்களுக்குக் காட்டுவதற்காக விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு வருகிறதா? ☐ ☐
- சமூகக் கவனத்துக்கும் புகழ்ச்சிக்குமாகச் செயற்படுகிறதா? ☐ ☐
- பேசுவதைப் போன்று ஏராளமான ஓசைகளை ஒன்று சேர்க்கிறதா (அபடா பாடுஹ் அபீ)? ☐ ☐
- எளிய படப் புத்தகங்களில் ஆர்வம் காட்டுகிறதா? ☐ ☐

## 18 மாதங்களாகையில்

**பிள்ளை:**

- உள்ளே, வெளியே, மூடு, போடு என்பவற்றின் பொருளை விளங்கிக் கொள்கிறதா? ☐ ☐
- கேட்கும் போது 2 உடலுறுப்புக்களை விடக் கூடுதலாகச் சுட்டிக் காட்டுகிறதா? ☐ ☐
- குறைந்த பட்சம் 20 சொற்களை மாற்றமின்றிப் பயன்படுத்துகிறதா? ☐ ☐
- எளிய கேள்விகளுக்கு சொற்களால் அல்லது உடலசைவுகளால் பதிலளிக்கிறதா (பொம்மை எங்கே? அது என்ன?)? ☐ ☐
- விளையாட்டுப் பொருட்களின் மூலம் சில உருவகப்படுத்தும் விளையாட்டுக்களைச் செய்து காட்டுகிறதா (பொம்மைக்கு பருகக் கொடுத்தல், ஒரு பாத்திரத்தைத் தொப்பியாக உருவகித்தல்)? ☐ ☐
- குறைந்த பட்சம் நான்கு வித்தியாசமான மெய்யொலிகளை ஏற்படுத்துகிறதா (க், ச், ட், த், ப், ற், ந், ம்)? ☐ ☐
- எளிய புத்தகங்களை வாசித்துக் காட்டப்படுவதிலும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் மகிழ்ச்சியடைகிறதா? ☐ ☐
- ஒரு விரலைப் பயன்படுத்தி படங்களைச் சுட்டிக் காட்டுகிறதா? ☐ ☐

## 2 ஆண்டுகளாகையில்

**பிள்ளை:**

- இருபடிப் பணிப்புக்களைப் பின்பற்றுகிறதா (போய் கரடிப் பொம்மையைத் தேடியெடுத்து பாட்டிக்குக் காட்டு.)? ☐ ☐
- 100 முதல் 150 சொற்கள் வரை பயன்படுத்துகிறதா? ☐ ☐
- குறைந்த பட்சம் இரண்டு பதிற்பெயர்களைப் பயன்படுத்துகிறதா (நீங்கள், நான், என்னுடைய)? ☐ ☐
- இரண்டு முதல் நான்கு சொற்கள் வரை கொண்ட குறுகிய சொற்றொடர்களை மாற்றமின்றிப் பயன்படுத்துகிறதா (அப்பாவின் தொப்பி. திரக்கு கீழே போகிறது.)? ☐ ☐
- ஏனைய சிறுவர்கள் சூழவிருப்பதில் மகிழ்ச்சியடைகிறதா? ☐ ☐
- ஏனைய பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பொருட்களைக் கொடுக்கவும், ஏனைய பிள்ளைகளின் செயல்களையும் சொற்களையும் செய்து காட்டவும் தொடங்குகிறதா? ☐ ☐
- ஏனையோரால் 50 முதல் 60 வீதம் வரையான நேரங்களில் விளங்கிக் கொள்ளக்கூடிய சொற்களைப் பயன்படுத்துகிறதா? ☐ ☐
- சொற்களை அல்லது ஓசைகளை எளிதாகவும் முயற்சியின்றியும் உருவாக்குகிறதா? ☐ ☐
- புத்தகங்களைச் சரியான முறையில் பிடித்து, தாள்களைப் புரட்டுகிறதா? ☐ ☐
- விளையாட்டுப் பொருட்களின் மூலம் சில உருவகப்படுத்தும் விளையாட்டுக்களைச் செய்து காட்டுகிறதா (உதாரணமாக கரடிப் பொம்மையை உறங்கத் தயாராக்குதல்?.. ☐ ☐
- நிறக்கட்டிகளால் கிறுக்குகிறதா? ☐ ☐

## 30 மாதங்களாகையில்

ஆம் இல்லை

**பிள்ளை:**

- அளவு (பெரிய/சிறிய), பெறுமானம் (சிறிதளவு/அதிகம், இன்னும்) என்பவற்றின் எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்கிறதா?. . . ☐ ☐
- வளர்ந்தோரின் இலக்கணங்கள் சிலவற்றைப் பயன்படுத்துகிறதா (இரண்டு விசுக்கோத்துக்கள், குருவி பறக்கிறது, நான் பாய்ந்தேன்)? . . . ☐ ☐
- 350 சொற்களுக்கு மேல் பயன்படுத்துகிறதா? . . . ☐ ☐
- ஓடு, கொட்டு, விழு, சாப்பிடு, உறங்கு, போ என்பன போன்ற செயற் சொற்களைப் பயன்படுத்துகிறதா? . . . ☐ ☐
- கூட இருப்பவர்களுடன் சொற்கள், விளையாட்டுப் பொருட்கள் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி முறை மாற்றும் செயற்பாடுகள் சிலவற்றில் பங்குபற்றுகிறதா? . . . ☐ ☐
- மற்றொரு பிள்ளை காயப்படும் போது அல்லது துக்கப்படும் போது கவலையை வெளிப்படுத்துகிறதா? . . . ☐ ☐
- விளையாட்டி பல்வேறு செயல்களை ஒன்று சேர்க்கிறதா (பொம்மைக்கு உணவூட்டிய பின்னர் அதனைப் படுக்கப் போடுதல். தொடருந்தின் பெட்டிகளைச் சேர்த்து தொடருந்தை ஓட்டி விட்டு, பெட்டிகளைக் கழற்றி விடுதல்.)? . . . ☐ ☐
- பெரும்பாலான சொற்களின் தொடக்கத்தில் ஓசைகளைப் போடுகிறதா? . . . ☐ ☐
- இரண்டு அல்லது பல அசைகளை அல்லது அடிகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்துகிறதா (வா-ழைப் பழம், கம்-பி-யூ-ட்டர், முருங்-காய்)? . . . ☐ ☐
- அச்சில் பயன்படும் பரிச்சயமான சின்னங்களையும் சைகைகளையும் விளங்கிக் கொள்கிறதா (நிறுத்தற் சைகை)? . . . ☐ ☐
- பரிச்சயமான கதைகளை ஞாபகம் வைத்திருக்கவும் விளங்கிக் கொள்ளவும் செய்கிறதா? . . . ☐ ☐

## 3 ஆண்டுகளாகையில்

**பிள்ளை:**

- யார், எது, எங்கே, ஏன் எனும் கேள்விகளை விளங்கிக் கொள்கிறதா? . . . ☐ ☐
- ஐந்து முதல் எட்டுச் சொற்கள் வரை பயன்படுத்தி நெடிய வசனங்களை உருவாக்குகிறதா? . . . ☐ ☐
- கடந்தகால நிகழ்வுகளைப் பற்றிப் பேசுகிறதா (தாத்தா பாட்டியின் வீட்டுக்குச் செல்லல், குழந்தைப் பராமரிப்பில் ஒரு நாள்)? . . . ☐ ☐
- எளிய கதைகளைக் கூறுகிறதா? . . . ☐ ☐
- விருப்பமான விளையாட்டுத் தோழர்களிடம் கவரப்படுவதைக் காட்டுகிறதா? . . . ☐ ☐
- பல படிமுறை உருவக விளையாட்டுக்களில் ஈடுபடுகிறதா (ஒரு உணவைச் சமைப்பதாக, ஒரு காரைப் பழுதுபார்ப்பதாக உருவகப்படுத்துதல்)? . . . ☐ ☐
- அவள்/அவன் கூறுவதை குடும்பத்துக்கு வெளியிலுள்ள பெரும்பாலானோர் பெரும்பாலான நேரங்களில் விளங்கிக் கொள்ளும் விதத்தில் பேசுகிறதா? . . . ☐ ☐
- அச்சிடுவதன் தொழிற்பாட்டை விளங்கிக் கொள்கிறதா (விலைப்பட்டியல்கள், பட்டியல்கள், சைகைகள்)? . . . ☐ ☐
- எதுகை மோனைச் சொற்களில் ஆர்வத்தையும் விளங்கியிருப்பதையும் வெளிக்காட்டுகிறதா? . . . ☐ ☐

## 4 ஆண்டுகளாகையில்

**பிள்ளை:**

- மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட படிமுறைகளைக் கொண்ட பணிப்புரைகளைப் பின்பற்றுகிறதா (முதலில் சில காகிதங்களைப் பெற்று, பின்னர் ஒரு படத்தை வரைந்து, அதைத் தாய்க்குக் கொடுத்தல்.)? . . . ☐ ☐
- வளர்ந்தோரைப் போன்று இலக்கணத்தைப் பயன்படுத்துகிறதா? . . . ☐ ☐
- தொடக்கம், மத்தி, முடிவு எனக் கொண்டு கதைகளைக் கூறுகிறதா? . . . ☐ ☐
- வளர்ந்தோருடனும் ஏனைய பிள்ளைகளுடனும் பிரச்சினைகளைத் தீர்க்க முயன்று பேசுகிறதா? . . . ☐ ☐
- சிக்கல் கூடிய கற்பனை விளையாட்டைச் செய்து காட்டுகிறதா? . . . ☐ ☐
- அவன்/அவளர் அந்நியர்களால் எப்போதும் விளங்கிக் கொள்ளப்படும் விதத்தில் பேசுகிறதா? . . . ☐ ☐
- எளிய எதுகை மோனைகளை உருவாக்குகிறதா (நான்-மான்)? . . . ☐ ☐
- சில எழுத்துக்களை அவற்றின் ஓசைகளுடன் பொருத்துகிறதா (ப எழுத்தை பஹ் என்கிறது, ச எழுத்தை சஹ் என்கிறது)? . . . ☐ ☐

## எப்பிள்ளை தொடர்பாகவும் எம்மை அழைக்க...

- நீங்கள் அவளது/அவனது பேச்சை/மொழி விருத்தியைப் பற்றிக் கவலைப்படுவதாயின்.
- நீங்கள் அவளது/அவனது செவிப்புலனைப் பற்றிக் கவலைப்படுவதாயின்.
- அவளது/அவனது பேச்சும் மொழித் திறமைகளும் சென்ற ஆறு மாதங்களில் முன்னேற்றமடைந்திராவிடின்.
- அடிக்கடி ஓசைகளை, அத்துடன்/அல்லது சொற்களை மீண்டும் மீண்டும் கூறுவது (திக்கல்).
- அவனது/அவளது குரல் வித்தியாசமானதாக அல்லது விந்தையானதாக உங்களுக்குத் தோன்றுகிறது.
- அவனது/அவளது விளையாட்டு அல்லது சமூக ஊடாட்டங்கள் பொருத்தமற்றவையாகத் தோன்றுகிறது.
- உதட்டு/அண்ணப் பிளவு, கேள்விக் குறைபாடு, PDD/மதியிறுக்கம், விருத்தி தாமதமாதல் போன்ற நோயறிதலைக் கொண்டிருத்தல் (தற்போதைக்கு சேவைகளைப் பெறாதவர்).

# முற்கூட்டிய தலையீடு முக்கியமானது.

## Early Abilities ஐ அழையுங்கள்

1-833-575-5437 **TTY** 1-833-575-5437

**இணையவழிப் பதிவு எமது வலைத்தளத்தில் கிடைக்கப் பெறுகிறது**

www.surreyplace.ca

நிறைவு செய்த திகதி: ______________________________

பிள்ளையின் பெயர்: ______________________________

பிள்ளையின் பிறந்த திகதி: ______________________________

படிவத்தை நிரப்புபவர்: ______________________________

தொடர்பு முகவரி: ______________________________

அஞ்சற் குறியீடு: ______________ நகரம்: ______________

தொலைபேசி எண்: ______________ மாற்றுத் தொலைபேசி எண் ______________

SURREY PLACE Ontario

PH1604SS821